*ஊட்டச்சத்து நிலையையும் மேம்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

## 3. சுகாதாரப் பணிகள் மேம்பாடு மற்றும் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்படுதல், பாரம்பரிய வேளாண் பொருட்களின் முக்கியத்துவம் மற்றும் சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகள் அறிமுகம் ஆகியவை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக மனித நேயத்தின் சிகரம் அன்னை தெரசா அவர்களால் 'அன்பு மகளே' என அழைத்து, அரவணைத்து, உலக அளவிலே நான் உருவாக்கிய இந்த மனித நேயத்தை, எனக்குப் பின்னால் கொண்டு செல்கிற மிகச் சிறந்த நிருவாகிகளில் ஒருவராக நீங்கள் வருவீர்கள் என்று (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை தெரசா அவர்களால் வாழ்த்தப்பட்ட நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மூன்று முத்தாய்ப்பான அறிக்கைகளை விதி 110-ன்கீழ் இங்கு தந்திருக்கிறார்கள்.*

*ஓர் அரசு வசதியுடையவர்களுக்கு, வாய்ப்புள்ளவர்களுக்கு, செல்வந்தர்களுக்கு, உதவுவதைவிட ஏழை எளிய மக்களுக்கு, நலிந்தவர்களுக்கு, அடித்தட்டு மக்களுக்கு, புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு, வாய்ப்பு வசதி இல்லாதவர்களுக்கு, ஏக்கத்தில் இருப்பவர்களுக்கு அந்த ஏக்கத்தைப் போக்குகிற வகையிலே திட்டமிடுவது இருக்கிறதே அதுதான் இந்த அரசின் மிகச் சிறந்த சாதனையாக இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*இன்றைக்கு, கிராமப்புற மக்கள், தொழிலாளர்கள், ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்விலே தாங்கள் வளர்வதற்கு, தங்களைக் கைதூக்கி விடுவதற்கு ஒரு கரம் கிடைக்காதா என்று நினைப்பவர்களுக்கு, கைதூக்கி விடுகிற ஒரு ஏந்திழையாக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்று திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.*

2012 நவம்பர் 2] [முனைவர் செ.கு. தமிழரசன்]

முதல் திட்டம், கிராமப்புறங்களிலே இருக்கிற அனைத்து சுகாதார நிலையங்களையும் ஒரு புரட்சிகர செயலாக்கத் திட்டத்திலே இன்றைக்குப் புதுமைப்படுத்துகிற திட்டம். பலநோக்கு சுகாதார உதவியாளர்கள் இருக்கிறார்களே, கிராம சுகாதார உதவியாளர்கள் அவர்களுக்குக்கூட இன்றைக்கு மடிக்கணினி தந்து, கம்ப்யூட்டர் முறையிலே இன்றைக்குக் கிராமப்புறத்திலே ஒரு மருத்துவப் புரட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது.

மருத்துவமனைகளிலே தகுந்த மருத்துவ வசதிகள், அதேபோன்று பணி நியமனங்கள், இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு தாயாக தமிழ்நாட்டில் சத்துணவு பெறுகிற குழந்தைகளுக்கெல்லாம் என்ன தர வேண்டுமென்று மெனு தயாரித்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தாய் தன்னுடைய குழந்தைகளுக்கு எதைத் தந்தால் அந்தக் குழந்தை மகிழ்ச்சியோடு இருக்கும், படுத்து உறங்கும், பாடும், ஆடும், ஓடி விளையாடும், வளரும், பெரிய கல்விமானாக வரும் என்று கவனமாகக் கருத்திலே கொண்டு, கனவோடு வளர்ப்பார்களோ, அதைப்போல ஒரு கனவோடு இன்றைக்குத் தமிழகத்திலுள்ள குழந்தைகளையெல்லாம் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயாக வளர்க்கிற அந்தப் பாங்கு அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11-20

ஐந்து நட்சத்திர விடுதிக்கு நிகராக, Five Star Hotels இருக்கிறதே, அதற்கு நிகராக menu. மாதம் முழுவதும், முதல் வாரத்தில் இது, இரண்டாவது வாரத்தில் இது, மூன்றாவது வாரத்தில் இது, நான்காவது வாரத்தில் இது, இன்றைக்கு கொண்டைக்கடலை, நாளைக்கு Vegetable Biriyani என்று விதவிதமாக, விதவிதமாக அந்தக் குழந்தைகளெல்லாம் பார்த்தறியாத அந்த உணவுகளையெல்லாம், படங்களில் பார்த்த அந்த உணவை, ஊடகங்களில் பார்த்த அந்த உணவை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவர்கள் வீடு தேடிப் போய் தருகிற அளவிற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகக் குழந்தைகளுக்கெல்லாம், அந்தக் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, அந்தக் குழந்தைகளைப் பெற்ற தாய்களுக்கும் அவர்கள் வயிற்றில் பால் வார்த்திருக்கிறார்கள். எங்களால் முடியவில்லை, எங்கள் தாய் இன்றைக்கு எங்களின் குழந்தைகளைச் சீராட்டி, பாராட்டி வளர்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே பரம்பரைச் சித்தர்களால் பாராட்டப்பட்ட, சித்தர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட, அந்த வைத்தியங்களுக்கும், சித்தர்கள் போற்றிய இளநீருக்கு, சீயக்காய்க்கு, அதற்கு மேலே பருத்திக்கு, கருவேப்பிலைக்கு, இன்றைக்கு இதற்கெல்லாம் வாழ்வு கிடைக்கிற வகையிலே, அந்தச் சித்தர்கள் செய்து காட்டிய அப்படிப்பட்ட வித்தைகளையெல்லாம் மீண்டும் தமிழகத்திலே மறுமலர்ச்சியை ஏற்படுத்துகிற அளவிற்கு, ஒரு பாரம்பரிய மருத்துவப் புரட்சியும், நம்முடைய விஞ்ஞான மருத்துவப் புரட்சியும், அதற்கு மேலே இந்தச் சத்துணவில் ஒரு புரட்சியும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். புரட்சித் தலைவரால் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டத்தை, புரட்சித் தலைவருடைய அரசியல் வாரிசான புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மேம்படுத்தியிருக்கிறார்கள் என்கிறபோது, ஏழையெளிய மக்களின், ஒடுக்கப்பட்ட ஒரு கோடி மக்களின் சார்பில் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும், பாராட்டையும் சொல்லி, நீங்கள் வாழ்வாங்கு வாழ்வீர்கள் என்று வாழ்த்தி அமைகிறேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுக்கான அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நல்வாழ்வுக்கென்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களைத் தந்து மேம்படுத்தியது மட்டுமல்லாமல், அதைச் சுகாதாரமாக, சுத்தமாகப் பராமரிப்பதற்காக சுமார் 4,000 பேருக்கு மேற்பட்ட துப்புரவுப் பணியாளர்களை நியமித்து, ஆரம்ப சுகாதார வளாகத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்கின்ற உத்தரவை, ஆணையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அறிவிப்பின் வழியாகத் தந்துள்ளார்கள்.

அதேபோன்று, அந்த மருத்துவமனையைப் பாதுகாப்பதற்கு சுமார் 2,176 காவல் பணியாளர்களை நியமித்தும், தீவிர சிகிச்சைப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, பிரசவப் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளைப் பாதுகாப்பதற்காக 1,400 காவல் பணியாளர்களை

நியமித்து, மருத்துவம் அல்லது சிகிச்சை பெற வருகின்ற நோயாளிகள் பாதுகாப்போடு, சுகாதாரத்தோடு, மகிழ்வோடு, அமைதியோடு சிகிச்சை பெற்று, குணம் அடைய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று இந்த அரிய அறிவிப்பைத் தந்து, நாட்டு மக்களை மகிழ்விக்கிற செய்தியாகத் தந்திருப்பதற்காக நன்றி பாராட்டுகிறேன்.

உயிர் காக்கின்ற இந்தப் பொதுக் காப்பீட்டுத் திட்டத்தில், கூடுதலாக செலவாகக்கூடிய உயர் அறுவை சிகிச்சைக்கு, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை போன்ற உயர் அறுவை சிகிச்சைக்கு ஆகும் கூடுதலான செலவை, அந்த பாதிக்கப்பட்ட ஏழையெளிய மக்கள் சுமப்பது கடினம் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருதி, அதற்காக அந்தக் கூடுதல் செலவையும், தொகுப்பு நிதியாக 10 கோடி ரூபாயைத் தந்து, அந்த ஏழையெளிய சாமானிய மக்களின், அந்த மருத்துவ சிகிச்சைக்கு ஆகும் செலவினை அரசே ஏற்கும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தாயுள்ளத்தோடு அவர்கள் இந்த அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். நாட்டு மக்கள், குறிப்பாக நோயாளிகள், பாதிக்கப்பட்டவர்கள், உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்களின் உயிரைப் பாதுகாக்க நம்முடைய தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த அறிவிப்பு, இந்த அறிவிப்பு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோன்று, தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகள், பழக்கவழக்கங்கள், நாகரிகத்திற்கு மூல ஆதாரமாக இருக்கிற உணவு வகைகள். குறிப்பாக இளநீர் போன்றவற்றை பயன்படுத்த, ஊக்கப்படுத்துவதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தவிருக்கிறார்கள். சாதாரணமாக நம்முடைய தோட்டங்களிலே, வீடுகளிலே கிடைக்கின்ற இளநீரில் அவ்வளவு அரிய வகையான உடல் நலத்திற்குத் தேவையான அனைத்து வகையான சத்துக்களும், ஊட்டமும் இருக்கின்றன. அதுபோன்று நம்முடைய மனிதன் முதன் முதலாக ஆடை தைத்து மானத்தைக் காக்க உதவிய பருத்தியைப் பாதுகாப்பதற்கும், அதைப் பயன்படுத்த விழிப்புணர்வூட்டி அதனுடைய விளைச்சலை உயர்த்துவதற்கும் வழிவகுத்திருக்கிறார்கள்.

[திரு. உ. தனியரசு] [2012 நவம்பர் 2

முற்பகல் 11-25

அதுபோன்று சீயக்காய். சாதாரண, கோடிக்கணக்கான மக்கள் பாரம்பரியமாகக் குளியலுக்குப் பயன்படுத்தி வந்த சீயக்காயினுடைய பயன்பாடு குறித்து விழிப்புணர்வைத் தந்ததற்காகவும், அதற்காக 10 கோடி ரூபாய் தந்துதவியதற்காகவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரம்பரியமிக்க நம்முடைய தமிழ் சமுதாயத்தினுடைய பண்பாட்டை, நாகரிகத்தை, அவர்களுடைய உணவு பழக்கவழக்கங்களைப் பாதுகாப்பதற்கும், அதை மேம்படுத்துவதற்கும், வளர்த்தெடுப்பதற்கும் அறிவிப்பு செய்ததற்காகவும் நன்றி பாராட்டுகிறேன்.

நிறைவாக, ஏழையெளிய, சாமானிய மக்கள் தங்களுடைய குடும்பங்களிலே அவர்கள் சமைத்து, அப்படி சமைக்கப்பட்ட வகை, வகையான உணவுகளை உண்பதற்கான வாய்ப்புக் குன்றிய கோடிக்கணக்கான அடித்தட்டு மக்களினுடைய அன்புக் குழந்தைகள், சிறார்கள் அறுசுவை உணவு என்று எழுத்திலோ அல்லது ஏதாவது ஒரு வகையில் பார்த்திருப்பார்கள் அந்த உணவை. அந்தக் குழந்தைகள் அறுசுவை உணவைக் கண்டிராத குழந்தைகள். அந்தக் குழந்தைகளுக்கு அறுசுவை அல்ல, நூற்றுக்கணக்கான வகை, வகையான உணவை, அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்களிலே தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு முன்பு பேசிவிட்டு அமர்ந்து இருக்கின்ற பாசமிகு திரு. செ.கு. தமிழரசன் ஐயா அவர்கள் சொன்னதைப் போன்று, நட்சத்திர உணவுக்கூடங்களிலே கிடைக்காத வகை, வகையான உணவைக்கூட, அந்த சாமானிய மக்களுடைய குழந்தைகள் பெற்று, அவர்கள் வயிறார உண்ட மகிழ்ச்சியில், அவர்களுக்கு முறையாகக் கொடுத்த கல்வியை மகிழ்ந்து கற்க வேண்டும். இந்தத் தமிழ் நிலத்தில் குழந்தைப் பருவத்திலிருந்து அவர்கள் ஆரோக்கியமாக வளர வேண்டும் என்பதற்காக, ஊட்டச்சத்தைத் தருகின்ற, வகை, வகையான உணவு வகைகளைத் தந்திருக்கிறார்கள். உலக வரலாற்றில், பொதுவுடைமை நாடுகளிலே மட்டுமல்ல, எந்த வளர்ந்த அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிலேகூட இல்லாத அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) வசதியை, வாய்ப்பை, தமிழ் நிலத்திலே வாழுகின்ற எனதருமை ஏழைத் தமிழ்க் குழந்தைகளுக்கு, குழந்தைச் செல்வங்களுக்குத் தந்துதவிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய

2012 நவம்பர் 2] [திரு. உ. தனியரசு]

திட்டங்களில் எல்லாம் சிறப்பான திட்டமாக, இந்தத் திட்டத்தைக் கருதி, மூன்று அறிவிப்புகளைத் தந்து, நாட்டு மக்களினுடைய உள்ளங்களில் எல்லாம் மகிழ்ச்சியை ஊட்டியிருக்கின்ற, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும், மீண்டும் நன்றி பாராட்டி, வாழ்த்தி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

**திரு. பி.வி. கதிரவன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினமும் மூன்று முத்தான அறிக்கைகளை மக்களுக்காக அர்ப்பணித்திருக்கின்றார்கள். கிராமங்களிலே வாழுகின்ற தாய்மார்கள் கருவிலே வளர்கின்ற குழந்தைகளைக் கண்காணிக்கின்ற செவிலியர்களுக்கு, அவர்கள் ஊர், ஊராகச் சென்று எல்லா தாய்மார்களையும் கவனிக்க முடியாது என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு மடிக்கணினி வழங்கி, அவர்கள் ஒரே இடத்தில் இருந்து அனைத்தையும் கவனிக்கின்ற வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு புதிய உத்தியை தமிழகத்தில் அறிமுகப்படுத்தியிருப்பதற்காக அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மருத்துவமனைகள். மருத்துவமனைகளிலே சுகாதாரக் கேடு இருக்கக்கூடாது. எந்த நேரத்திலும் சுத்தமாக இருக்க வேண்டுமென்பதற்காக, பணியாளர்களை நியமித்து, அதிலும்கூட, 200 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைக்கு ஒருவிதமாகவும், அதைவிட அதிகமாக படுக்கை வசதிகள் இருக்கின்ற மருத்துவமனைகளிலே தொகுப்பு ஊதியத்திலே காவலர்கள் மற்றும் பணியாளர்களைப் பணி அமர்த்துகின்ற வாய்ப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கின்றார்கள்.

ஊட்டச்சத்து. சத்துணவுத் திட்டத்திலும் சரி, அங்கன்வாடி திட்டத்திலும் சரி, ஒருவன் வளரும்போது, 'ஆளும் வளரணும், அறிவும் வளரணும், அதுதாண்டா வளர்ச்சி' என்ற பாடிய பாட்டிற்கிணங்க, அவன் சிறு வயதிலேயே அனைத்து உணவு வகைகளையும் உண்டு, நன்றாக வளர வேண்டுமென்பதற்காக, அவர்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை, ஒரு நாளைக்கு ஒரு முறை

menu அறிவிக்கப்பட்டிருக்கிறது. சிறிய வயதிலேயே அந்தக் குழந்தைகளுக்கு menu என்ற பழக்கத்தை உருவாக்கி, அவர்களுக்கு நல்ல சத்துள்ள உணவுகளைக் கொடுக்கின்ற நல்ல திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள்.

அதேபோன்று இயற்கை வேளாண்மைப் பொருட்களான இளநீர், சீயக்காய், பருத்தி போன்றவையெல்லாம், குறிப்பாக, தமிழகத்தில் பாரம்பரியமானவை. அந்தப் பாரம்பரியத்தைக் காக்கின்ற வகையிலே, மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும், இந்தப் பொருட்களைப் பயன்படுத்துவதால் உடல் நலத்திற்கு நல்லது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 10 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளார்கள். இதுபோன்ற சிறந்த திட்டங்களையெல்லாம், ஏழையெளிய மக்களுக்குப் பயன்படுகின்ற திட்டங்களையெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே கொண்டுவந்து அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். அதற்காக எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மனதாரப் பாராட்டி அமர்கின்றேன்.

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலேயே இனிப்பான மூன்று அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்திருக்கிறார்கள். எங்கே தொடங்குவது என்று தெரியவில்லை. ஆனால், ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது; மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நான் பிறந்திருந்தால், பள்ளிக் கூடத்தில் சேர்ந்து இன்னும் நன்றாகப் படித்திருப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களைக் கர்ணனாகவே பார்க்கின்றேன். நான் கர்ணனைப் படங்களில் பார்த்திருக்கின்றேன். 'கலியுகக் கர்ணன்' என்று சொன்னால், அது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2012 நவம்பர் 2] [திரு. ரா. சரத்குமார்]

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், மனித வாழ்க்கைக்கு மிக மிக அவசியம் கல்வி; கல்விக்கேற்ற வேலை; வேலைக்கேற்ற ஊதியம். அதன்பிறகு, சுகாதாரம் மிக மிக அவசியம். ஏனென்றால், கல்வி பயிலுபவர்கள் சுகாதாரமாக, நல்ல உடற்கட்டுடன், நோயில்லாமல் வாழ்ந்தால்தான் அவர்கள் பள்ளிக்குச் செல்லமுடியும்; வேலைக்குச் செல்லமுடியும் என்ற நிலை இருக்கிறது. ஆகையால், கல்வி, சுகாதாரம், வேலை இவையெல்லாம் முக்கியமான அம்சங்கள் ஆகும்.

கல்வியை எடுத்துக்கொண்டால், மாணவர்கள் கல்வி பயிலவேண்டும் என்பதற்காக மதிய உணவுத் திட்டத்தை, சத்துணவுத் திட்டமாக விரிவுபடுத்தி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சிறப்பான வகையிலே முட்டையையும் சேர்த்துக் கொடுத்து, அதன்பிறகு விரிவாக்கப்பட்டு, இன்றைக்கு அந்தச் சத்துணவுத் திட்டத்தின்மூலம், தினமும் பலவகையான உணவு வகைகளைக் கொடுக்கின்ற அளவிற்கு இதைச் சிந்தித்திருக்கிறார்கள் என்றால், அனைவரும் அனைத்தையும் பெறவேண்டுமென்ற காரணத்திற்காகத்தான். ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வைக் களைந்து, நாம் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களுக்கும் அறுசுவை உணவு கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில், பள்ளிக் குழந்தைகள் சிறப்பாகப் படிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய வீட்டிலேயே சில சமயம் அம்மா தினமும் காலையிலே முட்டையைக் கிண்டிக் கொடுத்தால், 'என்னம்மா! தினமும் இதேதானா?' என்று நாமே கேட்டுவிடுகிறோம்.

அதேபோன்று, பள்ளிக் குழந்தைகளுக்கும் இதேபோன்று சாப்பாட்டினைப் போட்டுக் கொண்டிருந்தால், அவர்களுக்கும் இதுபோன்றதொரு saturation point வந்துவிடுமே என்று எண்ணி, அவர்களுள் புகுந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறு குழந்தைகளுள் புகுந்து, அவர்களின் எண்ணத்தில் என்ன பதிவாகியிருக்கும் என்பதை உணர்ந்து, இதைச் செயல்படுத்தியிருக்கிறார்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அவர்களுக்கு என்ன தேவை? அவர்களுடைய பக்கத்து வீட்டில் முட்டை மசாலா சாப்பிடுகிறார்கள்; மட்டன் மசாலா சாப்பிடுகிறார்கள் என்றால், இந்தக் குழந்தை ஏங்குமே என்று ஒரு தாயுள்ளத்துடன், அந்தக்

குழந்தையும் சிறப்பான உணவு உண்ண வேண்டும் என்ற அடிப்படையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் சிந்தித்து 7 நாட்களுக்கும் 7 விதமான உணவைக் கொடுத்திருக்கிறீர்களே! உண்மையிலேயே நீங்கள் கலியுகக் கர்ணன்தான்! (மேசையைத் தட்டும் ஒலி) அதில் எந்தவொரு மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

ஒரு நல்லாட்சிக்கு, ஒரு நல்ல முதலமைச்சர் இருக்கவேண்டும். அந்த வகையில் நாம் நல்ல ஒரு முதலமைச்சரைப் பெற்றிருக்கின்றோம். பலரும் வெளியே பலவிதமாகச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், மக்களை நன்றாகப் புரிந்து, உணர்ந்து, நல்லாட்சி தரவேண்டுமென்று உறுதியுடன் இருக்கின்ற ஒரு முதலமைச்சரைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சுகாதாரம்; அந்த அடிப்படையிலேயே சுகாதாரம் மிக மிக அவசியம். சிலர் சிகிச்சை பெறமுடியாமல் இருப்பவர்கள், சிகிச்சைக்கு வசதியில்லாமல் இருப்பவர்கள், முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின்மூலமாக இன்றைக்குப் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். 77 நோய்களுக்கு அந்தக் காப்பீட்டுத் திட்டம் இருந்தாலும், kidney transplantation, liver transplantation, stem cell therapy போன்ற நோய்களுக்கெல்லாம் சிகிச்சை அளிக்க வேண்டுமென்று உன்னிப்பாகக் கவனித்து—வெளிநாடுகளில்கூட இதுபோன்று சிந்திக்க முடியாது. அந்த அளவிற்கு சிந்தித்து— இவற்றிற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். தனிப்பட்டவர்களால், சாதாரண குடும்பத்தினரால் இதுபோன்ற நோயைத் தீர்க்க மருத்துவமனைக்குச் சென்றால், அவர்களால் நிச்சயமாக பணத்தைச் செலவழித்து உயிரைக் காப்பாற்ற முடியாது என்பதை நன்கு உணர்ந்து, அந்த நோய்களையும் அந்தத் திட்டத்திலே சேர்த்திருக்கிறார்கள்.

Liver transplantation, kidney transplantation, stem cell therapy, bone marrow transplantation போன்றவற்றிற்கெல்லாம் சாதாரண மக்களால் சிகிச்சை பெறுவது மிகவும் கடினம். மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரேயொரு கோரிக்கை; இந்த facial disfigurement என்பது நிறைய பேருக்கு இருக்கின்றது. அதைக்கூட இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும். பாதிக்கப்பட்ட பலரின்

குடும்பத்தினருக்கு கிட்டத்தட்ட எட்டரை இலட்சம் ரூபாய் செலவாகிறது; ஐந்தரை இலட்சம் ரூபாய் செலவாகிறது என்று சொல்கிறார்கள். பல பேர் பிறக்கும்போதே உதடு பாதியாகப் பிரிந்து, வேறுமாதிரியான முக அமைப்புடன் பிறக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கும் பயனளிக்கும் வகையில், இந்த நோயையும் அந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டீர்கள் என்றால், சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக மாற்று அறுவை சிகிச்சை ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தில் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

**திரு. ரா. சரத்குமார்:** அது முதலிலே இருக்கிறது. அது சென்ற காப்பீட்டுத் திட்டத்தில் இருந்தது. அண்மையிலே அது சில இடங்களிலே செய்யப்படாத சூழ்நிலையை உணர்ந்ததன் அடிப்படையிலேதான் இந்தக் கருத்தை நான் மீண்டும் உங்களிடம் பதிவு செய்தேன். மிக்க நன்றி. அது தொடர்ந்து நடைபெற வேண்டும் என்ற அவா. அதனால் மீண்டும் அதை வலியுறுத்தி இருக்கின்றேன்.

அது மட்டுமல்லாமல், உடல் நலத்திற்கு இளநீர் குடிக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஏனென்றால், மது அருந்தாதே என்று 4 ஆம் தேதி அன்று நடை பயணம் இந்தியா முழுவதும் நடக்கிறது. இளநீர் குடியுங்கள் என்று சொல்லி ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி நடக்கச் சொல்லி இருக்கிறீர்கள் அம்மா! நீங்கள் சொன்னீர்கள் என்றால், நான் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை நடக்கத் தயார். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நன்றாக இருக்க வேண்டும், சுகமாக இருக்க வேண்டும், நன்றாக வாழ வேண்டும், அவர்கள் தெம்பாக, நன்றாக இருக்க வேண்டும். நல்ல நல்ல பழக்கத்தை, அதாவது, நல்லவர்கள் நல்லபடியாக இருக்க வேண்டுமென்றால், அந்தக் குழந்தைகள்

சிறப்பாக இருக்க வேண்டும். வருங்காலத்தில் சிறந்த மாணவர்களாக, நல்லவர்களாக வளர வேண்டுமென்றால், சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, கல்வி பயில பள்ளிக்கூடத்திற்குச் செல்லும்போது வித விதமான உணவுகளைக் கொடுக்க வேண்டும். அதை எதற்கு நான் முக்கியமாகச் சொல்கிறேன் என்றால், சாப்பாடு மட்டும் போடவில்லை. Drop–outs-ஏ இல்லாத ஒரு பள்ளிக்கூடத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் விதைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டிலே சாப்பாடு இல்லை, பக்கத்து வீட்டிலே நல்ல சாப்பாடு கிடைக்கவில்லை என்பதையெல்லாம் மறந்து, அங்கே போனால் நல்ல சாப்பாடும் கிடைக்கும், நீ படிக்காவிட்டால் அப்புறம் அப்பா நிச்சயமாகக் கண்டிப்போடு நடந்துகொள்வார்கள் என்று எச்சரிக்கை செய்கின்ற வகையிலே சிறந்த ஒரு முயற்சி எடுத்திருக்கிறார்கள்.

Outsourcing method-லே மருத்துவமனைகளையெல்லாம் எப்படி சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக Outsourcing முறையிலே அதற்குப் பணியாளர்கள், பலர் நிறைய எழுதி இருக்கிறார்கள். அதைச் சொல்ல முடியாது. சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அத்துணை அளவிற்கு சிறப்பான மூன்று அறிவிப்புகளைச் சொல்லி, மக்களுக்கு எது தேவை என்பதை உணர்ந்து, அந்தத் தேவைகளை உணர்ந்து செயல்படுகின்ற ஒரு முதலமைச்சர் அவர்கள் நீடூழி வாழ்ந்து, பல்லாண்டு வாழ்ந்து, பல பேறு பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்த மாதிரி உள்ளம் பலருக்கு இருக்காது. பிறரைப் பற்றிச் சிந்திக்கின்ற நல்ல உள்ளம் கொண்டவர்கள் என்றும் நீடுழி வாழ வேண்டும் என்று சொல்லி, கலியுகக் கர்ணனாக இருக்கும் நீங்கள் தொடர்ந்து இதுபோன்று விதி 110-ன்கீழ் அறிக்கைகளைக் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும், நாங்கள் வாழ்த்திக்கொண்டே இருக்க வேண்டும் என்று கூறி, நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று விதி 110-ன்கீழ் தமிழக முதல்வர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய 3 அறிக்கைகளையும் முதற்கண் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். மக்கள் நல்வாழ்விலே

2012 நவம்பர் 2] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

பெரிதும் அக்கறை கொண்டு, ஏறக்குறைய 8 கோடி மக்கள் வாழ்கின்ற தமிழகத்தில், அவ்வப்பொழுது கிராமங்களில், நகரங்களில் திடீர், திடீர் என வரக்கூடிய நோய்கள், குறிப்பாக, டெங்கு, பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்கள் மற்றும் பிற நோய்கள் எல்லாம் வருகின்றபொழுது, தமிழகத்திலே ஒரே நேரத்திலே எந்தெந்த இடத்திலே, என்னென்ன விதமான நோய்கள், எத்தனை பேருக்கு இந்தக் காய்ச்சல் அல்லது இருமல் அல்லது வேறு விதமான நோய்கள் இருக்கின்றன என்பதை சாதாரணமாகக் கணக்கெடுக்கின்றபொழுது காலதாமதம் ஆகும். எனவே, கணினி என்று வருகின்றபொழுது உடனுக்குடன் தலைமைக்கு வந்து சேரவும், அது குறித்து உடனடியாகத் திட்டமிடவும், அந்த நோயை முளையிலேயே கிள்ளி எறிவதற்கும் இந்த விலை இல்லாத மடிக் கணினியை, குறிப்பாக, கிராம அளவிலே, அடிமட்ட அளவிலே, grass root workers என்று அழைக்கக்கூடிய கிராம சுகாதார செவிலியர்களுக்கு வழங்கி இருப்பது உண்மையிலேயே 'தொலைநோக்குத் திட்டம் 2023' என்ற அந்தத் திட்டத்தினுடைய ஒரு கட்டமாக அதை நான் கருதுகிறேன். இது உண்மையிலேயே ஒரு breakthrough என்று அழைக்கக்கூடிய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு திட்டம். எனவே, இந்தத் திட்டத்தை நான் மனதார வரவேற்கிறேன்.

அதேபோல, அடிக்கடி இப்பொழுது மருத்துவமனைகளில் குழந்தைகள் திருட்டு என்பது நடைபெற்றுவிடுகிறது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. குழந்தைகள் இல்லாதவர்கள் குழந்தைகளைத் தேடிப் பிடித்து, ஆட்களை வைத்து திருடுகிறார்கள். இது குறிப்பாக, மகப்பேறு மருத்துவப் பகுதிகளிலே காவலர்கள் இல்லாத ஒரு குறையின் காரணமாக இதெல்லாம் நடந்து விடுகிறது. எனவே, அதைக் கணக்கிலேகொள்ள வேண்டும், அதேபோல அண்மையிலேகூட பொது மருத்துவமனையிலே குழந்தையை எலி கடித்த ஒரு சிறிய சம்பவம்கூட நடந்தது. எனவே, ஒட்டுமொத்தமாக அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகளுக்கு எந்த விதத்திலேயும், எந்த நிலைகளிலேயும் குறைவாக இருக்கக்கூடாது என்ற அடிப்படையிலேயும், மருத்துவமனைகளை சுகாதாரமாகவும், பாதுகாப்பாகவும் வைக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயும் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்களையும் மற்றும் காவலர்களையும் நியமிக்கப் போவதாக தமிழக முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதேநேரத்தில் outsourcing என்ற

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2012 நவம்பர் 2

முறையில் மட்டும்தான் எங்களுக்கு உடன்பாடு கிடையாது. அரசே நேரிடையாக நியமித்தால்தான் அதில் வேறு எந்தத் தவறும் ஏற்படாது என்ற என்னுடைய கருத்தை நான் இங்கு பதிவு செய்கிறேன்.

முற்பகல் 11-40

அடுத்து, ஆயிரத்திற்கும் மேற்பட்ட வியாதிகளுக்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்த விரிவான காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் ஏற்கெனவே மக்களுக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சாதாரண வியாதிகள் மற்ற வியாதிகளுக்குகூட தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலையிருந்தாலும், முக்கியமான சிகிச்சையான, சிறுநீரக மாற்று சிகிச்சை (Kidney transplantation), stem cell and liver transplantation போன்ற சிசிச்சைகளுக்குக்கூட, அதாவது post surgical, அறுவை சிகிச்சை முடிந்த பின்னர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் அவர்கள் சிகிச்சை பெற வேண்டிய நிலை இருக்கிறது. அதற்கு அவர்கள் Immunosuppressants என்ற மருந்தைச் சாப்பிட வேண்டும். ஏனென்றால் வேறு உடலிலிருந்து சிறுநீரகத்தை எடுத்து வைக்கும் காரணத்தினால், சிறுநீரகத்தைப் பொருத்தும் உடலுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட்டு விடக்கூடாது. அதாவது rejection ஏற்பட்டு விடக்கூடாது. இதற்கு அதிகமான செலவுகள் ஏற்படும் என்ற காரணத்தினாலும், வாழ்நாள் முழுவதும் மருந்துகள் சாப்பிட வேண்டும் என்ற காரணத்தினாலும் பல நபர்கள் இந்த சிகிச்சையை மேற்கொள்ளாமல் இருக்கிறார்கள். தற்போது இந்த அரசு அந்தச் செலவுகள் முழுவதையும் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது. இதனை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக மீண்டும் நான் வரவேற்கிறேன்.

Liver Transplantation surgery, stem cell அதாவது bone marrow-விலிருந்து cell எடுத்து ஒரு உறுப்புக்குப் பதிலாக, இதை வைத்து, அந்த உறுப்புகளை வளர்த்தெடுப்பது என்பதெல்லாம் நவீன சிகிச்சைகள். இப்போது இந்தச் சிகிச்சைகள் பம்பாய் போன்ற இடங்களிலும், சென்னையில் சில இடங்களில் மட்டும்தான் நடைபெறுகின்றன. இப்போது இந்தச் செலவினத்தையும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். இது சுகாதாரத் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும்.

அடுத்து, தமிழக முதலமைச்சர் சத்துணவில் கூடுதலாக சுவையான உணவு, விதவிதமான உணவு கொடுப்பது என அறிவித்திருப்பதையும் நான் வரவேற்கிறேன். ஏனென்று சொன்னால், இப்போது தனியார் பள்ளிகளை நோக்கிச் செல்லக்கூடிய ஒரு பார்வை பொதுவாக வந்துவிட்டது. இதை எப்படி நிறுத்தலாம் என்றால், ஒன்று பள்ளிகளில் நல்ல தரமான பாடங்களைச் சொல்லிக் கொடுப்பது, அடுத்து குழந்தைகளுக்கு தரமான, சத்தான உணவு வழங்குவது. ஏற்கெனவே முட்டை கொடுத்து வந்தாலும்கூட, அதனை எந்தவிதத்திலும் நிறுத்தாமல், தினமும் விதவிதமாகவும், தினம் ஒரு உணவு, வாரத்திற்கு ஒவ்வொரு உணவாக மாற்றி புதிய வகைகளில் அந்த உணவைக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இதெல்லாம் ஒட்டுமொத்தமாக கல்வியில், மருத்துவத்தில், தொழில் மற்றும் பல்வேறு வழிகளில் மனித வளத்தை மேம்படுத்தும் வகையில் தமிழக முதலமைச்சர் அறிவித்திருக்கக்கூடிய அந்த அறிவிப்புகளுக்கு என்னுடைய பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் பாரம்பரியமாகப் பயன்படுத்தக்கூடிய இளநீரைப் பயன்படுத்தாமல் வெளிநாட்டு பானங்களை இப்போது நாம் பயன்படுத்தும் வழக்கத்திற்கு வந்து இருக்கிறோம். அதிலிருந்து விடுபட இளநீரைப் பயன்படுத்தவும், ஷாம்பு போன்ற பொருட்களைப் பயன்படுத்தி முடிகள் எல்லாம் கொட்டி மொட்டையாகாமல் தடுத்திட, சீயக்காயைப் பயன்படுத்துவதற்கும், நவீன ஆடைகளைப் பயன்படுத்தி அலர்ஜி ஆகாமல் பருத்தியை ஊக்குவிக்கக்கூடிய வகையில் அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக ஏறக்குறைய 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கக்கூடிய இந்த நல்ல நடவடிக்கைகளை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்று அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.

**DR. (TMT) NANCY ANN CYNTHIA FRANCIS:** Hon'ble Speaker and my beloved Amma, your love knows no bounds for the people of Tamil Nadu. Everyday is a new day when you come here to the Assembly, because we know that we are going to get immense gifts from you . And today you have given us plenty, about which I want to say a few words as special acknowledgement. Improving the security system in the

Government hospitals is very commendable. Implementing the increase in the reimbursement for certain illnesses like liver transplant, bone marrow transplant, stem cell transplant, kidney transplant and extending insurance cover not only for the treatment as such but also for the post transplant treatment is commendable. These treatments are not affordable even for the middle class people. But you Amma, in your great love for us, have made it available for even the poor persons. Giving a balanced diet for the children at the noon meal centres and the Anganwadis was just not giving some rice to eat, but your maternal love has proved that you have taken so much great care not only to provide a balanced diet but a very palatable diet, a variety of dishes, (Thumping of desks) till now they would be seen only in the kitchens and dining tables of affordable persons. (Thumping of desks) Amma, we, the people of Tamilnadu, are very lucky in having you as our Chief Minister, (Thumping of desks) someone who takes care of our every need to the very minutest detail. God bless you, Amma. Thank you.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூரக் காட்சியோடு, நல்ல சிந்திக்கிற சிந்தனையோடு வளமான தமிழகத்தை மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அற்புதமான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். சுகாதாரம் மிகவும் இன்றியமையாதது என்பதையும், கிராம மருத்துவத்திலே கம்ப்யூட்டர் யுகத்தைக் கொடுத்திருப்பதும், எந்த மருத்துவ சுகாதார நிலையங்களிலும் குறை இல்லாமல் பணியாளர்களை நியமித்தும், மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் இருந்தும், ஏழைகள் பெரிய நோய்களால் பாதிக்கப்படுகின்றபோது, எந்த மருத்துவமனைக்கும் சென்று சிகிச்சை பெற அவதிப்படுகிற ஏழை மக்களைப் பாதுகாக்கக்கூடியவிதத்திலே, இங்கே அளிக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டங்கள் எல்லாம் போற்றுதலுக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*சாதாரண ஒரு ஏழை, ஒரு சிறிய நோய்க்கு சாதாரண ஒரு மருத்துவரைப் பார்த்து, இல்லையென்றால் ஒரு அரசு மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.*

2012 நவம்பர் 2] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

ஆனால், கொடிய, பெரிய நோய்கள் வருகின்றபோது இலட்சக்கணக்கான பணத்தைச் செலவழிக்க அவனுக்கு வாய்ப்பு இல்லை; அவனுக்குக் கிடைப்பது மரணம்தான். கடினமான சூழ்நிலையில் ஏழைகள் மருத்துவம் பெற்றுக்கொள்வதற்குக் கொடுத்திருக்கக்கூடிய திட்டம் என்பது இறைவன் கொடுக்கக்கூடிய ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, விவசாய மக்களுடைய நலனைக் கருதி, விவசாயிகள் குன்றிப் போகக்கூடாது, இயற்கை வழியிலே நம்முடைய மக்கள் திகழ வேண்டும், வலிமையான மனிதர்களாக, மக்களாக வாழ வேண்டுமென்ற எண்ணத்தோடு சீயக்காய், இளநீர் மற்றும் பருத்தி உடைகளை அணிந்து வலிமையான மனிதர்களாக வாழ வேண்டுமென்று அறிவுரை கொடுத்திருப்பது மிகவும் இன்றியமையாத ஒன்று.

அதுமட்டுமல்ல, சாதாரண பிள்ளைகள், அங்கன்வாடியிலே படிக்க வேண்டும், எல்லாப் பிள்ளைகளும் ஒரே தரமாகப் படிக்க வேண்டும், ருசிகரமான உணவுகளைச் சாப்பிட வேண்டும் என்ற தூய எண்ணத்தோடு, நல்ல எண்ணத்தோடு கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த உணவு, சிறந்த நிபுணர்களை வைத்து எல்லாப் பிள்ளைகளும் ருசிகரமான உணவுகளை அருந்தி, வருங்காலத்திலே படித்து உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்று சொல்லக்கூடிய அற்புதமான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் கொடுத்திருப்பது வரவேற்கக்கூடியது. காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் வரவேற்பதில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற மூன்று திட்டங்களையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் முதலில் வரவேற்கிறேன். முதலிலே, பாரம்பரியமான வேளாண் பொருட்கள் பயன்பாடு என்ற நமது தமிழக முதலமைச்சருடைய சிந்தனை என்பது சிறப்புக்குரியது, சரியானது. வேளாண் தொழிலை முதன்மைத் தொழிலாக

[திரு. சு. குணசேகரன்] [2012 நவம்பர் 2

உருவாக்குவது என்பது உற்பத்திக்கு மட்டுமல்ல, நமது நாட்டு வேளாண் உற்பத்திப் பொருட்களை நாம் பயன்படுத்துகிற ஒரு நல்ல கொள்கையை நாம் முதலிலே உருவாக்க வேண்டும். அந்த அடிப்படையில் இளநீர், சீயக்காய், பருத்தி என்ற மூன்று பொருட்களையும் இன்றைக்கு மக்கள் பயன்படுத்துகிறவிதமாக ஒரு விழிப்புணர்வு இயக்கத்தை நடத்துவதற்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் திட்டமிட்டது, காலத்தில் எடுக்கப்பட்ட முடிவாக நான் கருதுகிறேன். நமது நாட்டிலே ஒரு பழமொழி உண்டு; "பெத்த பிள்ளை காப்பாற்றாவிட்டாலும், வைத்த பிள்ளை காப்பாற்றும்" என்று சொல்வார்கள். தென்னம்பிள்ளையை நாம் பிள்ளை என்றுதான் அழைக்கிறோம். ஆனாலும், தென்னை இன்றைக்குப் பயனளிக்கவில்லை என்று கூக்குரல் எழுப்புகிற நேரத்தில் தென்னை விவசாயிகள், இளநீரை கூடுதலாக மக்கள் பயன்படுத்த வேண்டும் என்று சரியான சிந்தனையில் சொல்வதற்குப் பதிலாக, கள் இறக்க வேண்டும் என்று அதற்கான போராட்டம் நடைபெறுகிற நேரத்தில், இளநீரைத் தமிழகத்திலே இருக்கிற மக்கள் பயன்படுத்த வேண்டும். அதனால் மக்களுக்கு உடல்நலம் எப்படி (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பாக இருக்கும் என்பதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, பெற்ற பிள்ளையை மட்டுமல்ல, நாம் வைத்த பிள்ளையையும் காப்பாற்றுகிற ஒரு திட்டமாக இந்த இளநீருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நாம் பார்க்க வேண்டும்.

*முற்பகல் 11-50*

அதைப்போல சீயக்காய், நாமெல்லாம் மறந்து விட்டோம். தமிழக முதல்வர் அறிவிக்கும்போதே எனக்கு சிறிய வயதிலே என்னுடைய அம்மா ஞாபகம் வந்தது. அப்போதெல்லாம் பார்த்தீர்களென்றால், சீயக்காயை காயப் போட்டு அதிலே வெந்தயம் போன்ற பல்வேறு பொருட்களைக் கலந்து மிஷினிலே அரைத்துக் கொடுத்து, சிறிய பிள்ளைகளாக நாமெல்லாம் இருக்கையிலே, எண்ணையைத் தலையில் வைத்து சீயக்காயை கதறக் கதற தேய்த்து நம்மையெல்லாம் குளிப்பாட்டி விடுவார்கள். தமிழக முதல்வர் சொல்லும்போது சொல்கிறார்கள் பெண்களுக்கான கூந்தல் என்று, இல்லை, ஆண்களுக்கான தலைக்கும் அது தேவை. (சிரிப்பு) இன்றைக்கு சட்டமன்றத்தில் பல உறுப்பினர்களுடைய தலைகளைப் பார்க்கும்போதே இந்தச் சீயக்காயை முன்பே பயன்படுத்தி இருக்க வேண்டும். (சிரிப்பு)

2012 நவம்பர் 2] [திரு. சு. குணசேகரன்]

பயன்படுத்தி இருந்தால், கருகருவென்ற தலைமுடியுடன் ரொம்பப் பேர் இருந்திருப்பார்கள். அந்த அடிப்படையில் இன்றைக்கு சீயக்காய் மிக முக்கியம்.

பருத்தி ஆடைகள் அதைவிட முக்கியம். தோல் வியாதிகள் போன்றவற்றைப் புறக்கணித்து நமது மண்ணுக்கு, வெயில் உள்ள உஷ்ணமான இந்தப் பூமிக்கு பருத்தி ஆடைகள் தேவை. கண்டிப்பாக இவற்றையெல்லாம் ஒரு ஆழ்ந்த சிந்தனையோடு, வேளாண் பாரம்பரியப் பொருட்களை படிப்படியாக நாம் பாதுகாப்பது, பயன்படுத்துவது என்ற அந்த நோக்கத்தோடு எடுத்திருக்கிற அந்த முயற்சியை, சிந்தனையை நான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

அதைப்போல, ஊட்டச்சத்து அங்கன்வாடியில் 13 வகையான கலவை சாதம், நான் எழுத ஆரம்பித்தேன். சொன்ன வேகத்திற்கு எழுத முடியவில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான சாதம். நாம் உண்மையிலேயே நீண்டகாலமாக இதை உணரவில்லை. அதை தாயுள்ளம் கொண்டவர்கள்தான் உணர முடியும். அந்த அடிப்படையில் உணர்ந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏதோ வார்த்தைக்காக இதைச் சொல்லவில்லை. நமது நாட்டில் இருக்கக்கூடிய எல்லா தாய்க்கும் இருக்கக்கூடிய ஒரு பண்பின் அடிப்படையில் நம்முடைய தமிழக முதல்வரும் அதை உணர்ந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டிலேயே பார்த்தீர்களென்று சொன்னால், முட்டை ஒன்றுதான் ஒன்றாக வாங்குகிறோம். மூன்று பிள்ளைகளுடன் உட்கார்ந்து சாப்பிடுகையில், ஒரு பையன் அவித்த முட்டை வேண்டுமென்கிறான், ஒரு பையன் ஆம்லெட் போட வேண்டுமென்கிறான், ஆப்-பாயில் போட வேண்டும், அதைத் திருப்பிப் போட வேண்டும் என்று ஒரு பையன் சொல்கிறான். அதைத் திருப்பிப் போடாமலேயே கொடு என்று ஒரு பையன் சொல்கிறான். இப்படியெல்லாம் நாம் உணவு வகையிலே ஒரு குடும்பத்திற்குள்ளே பலவாறாகச் சாப்பிடுகிற நேரத்தில், நாம் இந்த ஊட்டச்சத்து பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரே மாதிரியாக அந்தத் தண்ணீரிலே போட்டு அவித்த முட்டையை அந்தத் தோலை எடுத்து உரித்துக் கொடுத்தோமென்றால் அந்தப் பிள்ளைகள் எப்படித்தான் சாப்பிடும். எனவே, மிளகுத்தூள், மசாலா, இன்னும் என்னென்னவோ சொன்னார்கள். மனப்பாடமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அந்தமாதிரி பலவகையான சாதம்

போடுவது உண்மையிலே பாராட்டுக்குரியது. இதை நினைக்கிற நேரத்தில் இப்போது நாம் குழந்தைகளாக இருந்திருக்கக்கூடாதா, என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு நல்ல திட்டமாக நான் பார்க்கிறேன். அதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன்.

அதைப்போல, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களில் சில திட்டங்களில் எங்கள் கொள்கை, அடிப்படையில் வேறுபட்டிருந்தாலும் பொதுவாக இந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். இன்றைக்கு சுகாதாரப் பணியாளர்கள் நான் பேசும்போது கூடச் சொன்னேன். நமது தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு 4,000 பேரை ஒரே நேரத்தில் பணியமர்த்தி மருத்துவமனைகளை எல்லாம் சுகாதார மையங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். நான் சமீபத்தில் நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்திக்கும்போதுகூட ஒரு கருத்தைச் சொன்னேன். சமீபத்தில் மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு ஒரு நோயாளியைப் பார்க்கச் சென்றிருந்த நேரத்தில், உண்மையிலேயே நான் ஒரு புகழ்ச்சிக்காக சொல்லவில்லை. நான் உள்ளே போனவுடன் அந்த மருத்துவமனையை 2, 3 தடவை பார்த்தேன். ஒருவேளை தனியார் மருத்துவமனைக்கு வந்து விட்டோமோ என்று. அந்த அளவுக்கு இராஜாஜி மருத்துவமனை எந்தவிதமான வாடையும் இல்லாமல், மிகச் சுகாதாரமாக, சுத்தமாக இருந்தது. நான் உடனடியாக நேராக அங்கிருக்கக்கூடிய Dean, மேலாளரை எல்லாம் சந்தித்து அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இதைப்போல மருத்துவமனைகளை வைத்துக்கொண்டாலே மருத்துவமனைக்கு வருகிற நோயாளிகளுக்கு பாதி நோய் தீர்ந்துவிடும். எனவே, சுகாதாரத்தை இன்னும் நீங்கள் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று சொல்லி, அந்தச் செய்தியை நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் இங்கே வந்து சொன்னேன். அப்படிப்பட்ட நடைமுறையை தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா மருத்துவ அதிகாரிகளும், எல்லா மருத்துவமனைக்கும் கொண்டு வந்தாலே உண்மையிலேயே பாதி நோய் தீர்ந்துவிடும் என்ற அடிப்படையில் அதற்கு உதவியாக இன்றைக்கு சுகாதாரப் பணியாளர்கள் 4,000 பேரை நியமித்திருப்பது; அதைப்போல இன்றைக்கு காவலர்களை பணி நியமனம் செய்திருப்பதெல்லாம் சிறப்புக்குரியது. இன்றைக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

2012 நவம்பர் 2] [திரு. சு. குணசேகரன்]
என்பது ஏதோ பேருக்காக இல்லாமல் மக்களுடைய நலனுக்காக என்ற அந்த உயரிய நோக்கத்தோடு செயல்படுத்தப்படுகிறது.

முற்பகல் 11-55

ஒன்றைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சமீபத்தில் ஏற்பட்டிருக்கிற டெங்கு காய்ச்சல், பத்திரிகையிலே நான் பார்த்தேன். டெங்கு காய்ச்சல் வந்தவுடன் அதற்கான பரிசோதனைகள் மக்களுக்கு, ஏழையெளியோர்களுக்கு செலவு கூடுதலாக ஆகிறது என்ற அடிப்படையில், அதை முதலிலே மருத்துவக் காப்பீட்டில் சேர்க்கவில்லை என்று சொன்னாலும், உடனடியாக அந்த டெங்கு காய்ச்சலுக்குக்கூட மருத்துவக் காப்பீட்டில் இணைத்து, மருத்துவ பரிசோதனை செய்வது என்பது, நமது தமிழக அரசுக்குரிய சிறப்பான செயல்.

'காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

என்று வள்ளுவப் பெருந்தகை சொன்னதைப் போல, நோய் என்பது தாக்கப்படுகிற நேரத்தில் மக்களுக்கு ஆற்றுகிற பேருதவியாக ஒரு நல்ல திட்டமாக மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுகிறது. அதன் அடிப்படையில்தான் நோய்களிலே மிகப் பெரிய நோயாகக் கருதப்படுகிற சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, Stem Cell Transplantation இப்படிப்பட்ட பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைச் செலவு அதிகம்.

கடந்த 15 தினங்களுக்கு முன்னால் என்னுடைய தொகுதியிலே ஒரு நண்பர் 25 வயது பையன், கல்லீரல் பாதிக்கப்பட்டு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து வேலூருக்கு அனுப்பப்பட்டு வேலூரில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்கிறார்கள். 20 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்று சொல்கிறார்கள். என்ன செய்வது என்று கேட்கின்ற நேரத்தில், நானும் என்ன செய்வது என்று புரியாமல் இருந்த நேரத்தில் அவன் இறந்துவிட்டான். உண்மையிலேயே அந்த வருத்தம் என் உள்ளத்திலே இருந்தது. இன்றைக்கு அப்படிப்பட்ட சாதாரண மனிதர்களுக்கு அல்லது நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை என்று சொல்கிற நேரத்தில் ரூ.5 இலட்சம், ரூ.10 இலட்சம் செலவு

ஏற்படுகிறது. அந்த முழுச் செலவையும் ஏற்றுக் கொண்டு, எந்த நோய் வந்தாலும் இந்தத் தமிழகத்திலே இருக்கின்ற மக்களைக் காப்பாற்றுவேன் என்று சொல்லுகிற ஒரு அரசைத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மக்கள் நல்வாழ்வு அரசாகப் பார்க்க வேண்டும். இந்தத் திட்டம் உண்மையிலேயே மிகச் சிறந்தது. சமீபத்தில் நான் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்கிற ஒரு வாய்ப்பு ஏற்பட்டு அப்படி செல்கிற நேரத்தில் அங்கே இருக்கிற மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள், மருத்துவமனைகளைப் பற்றி விசாரித்தேன். அங்கே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிற மருத்துவக் காப்பீடு அல்லது மக்களுக்கான அந்த உத்தரவாதம், தமிழ்நாட்டிலே எப்போது வரும் என்று நான் நினைக்கிற நேரத்தில், இங்கே இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே ஐரோப்பிய நாடுகளுக்கு இணையான அந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்குகிற அளவில், முழுச் செலவை ஏற்கிற அந்த ஒரு திட்டத்தை உண்மையிலேயே மனதாரப் பாராட்டுகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு இங்கே சொல்லப்பட்டிருக்கிற எல்லா அம்சங்களையும் வரவேற்று, ஒரேயொரு கருத்து, வேறுபாடாக அல்ல, ஒரு ஆலோசனையாக இந்த Outsourcing முறையை மட்டும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டும். அதையும் அரசுத் துறையிலேயே எடுத்து அந்தப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். அதைப்போல 6,000 செவிலியர்கள் இன்றைக்கும் பணி உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும். நான் அவர்களுக்கும் அந்தக் கோரிக்கை மனுவை அளிக்க இருக்கின்றேன் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுகின்ற உறுப்பினர்கள் அம்மா அவர்களுக்கு நன்றி சொல்வதோடு மட்டும் நிறுத்தினால் நன்றாக இருக்கும். மற்றவற்றை வேறு நேரத்தில் பேசிக் கொள்ளலாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை வீட்டுக் குழந்தைகள் ஒரு வேளையாவது ஒரு நாளைக்கு சாப்பிட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தோடு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட

சத்துணவுத் திட்டம். அந்த ஒருவேளை உணவையும், சுவைபட வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளை வரவேற்கிறேன்.

அதிலே எல்லாம் முட்டை, முட்டை என்று தான் வருகிறது. அண்மையில் பொருளாதார மேதை இந்திரா ராஜாராமன் அவர்கள், குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கிற ஊட்டச் சத்து குறைவைப் பற்றி குறிப்பிடுகையில் பாலும் ஒரு சிறந்த சத்துணவு என்ற வகையிலே பாலும் குழந்தைகளுக்கு வழங்கப்படுவது நன்று என்று கூறியிருக்கின்றார். இப்போது சோதனை அடிப்படையிலே இந்தத் திட்டத்தை மேற்கொள்கிறபோது, பாலையும் சேர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்ற பாரதியாரின் பாட்டுக்கிணங்க எல்லா உயிர்களுக்கும் உணவளித்துக் கொண்டிருக்கின்ற எங்கள் அன்னை, சத்துணவுக் கூடங்களில் அங்கன்வாடி மையங்களில் படித்துக் கொண்டிருக்கிற பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக, உணவுத் தரத்தையும் உயர்த்திக்காட்ட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த சத்துணவுத் திட்டத்தில் புகுத்தியிருக்கின்ற புரட்சித் திட்டங்களை அம்மா அவர்கள் படித்துக்கொண்டிருக்கும்போதே எங்களுக்கெல்லாம் பசிக்க ஆரம்பித்துவிட்டது. அம்மா அவர்கள் கொடுத்த மெனுவைப் பார்த்துவிட்டு உட்கார்ந்திருந்த அனைவருமே மிகுந்த ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தோம். இன்றைக்குக்கூட அந்த மெனுவின்படி மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கிடைக்காதா என்ற ஏக்கத்திலேகூட அம்மா அவர்களின் அந்தப் பட்டியலைப் பார்த்துக்கொண்டிருந்தோம். கேட்டதும் கொடுப்பவன் கிருஷ்ணன். ஆனால், குழந்தைகள் நினைக்காமலேயே, ஒரு தாய்க்குத் தெரியும் எந்த நேரத்தில் குழந்தைக்குப் பசி வரும், எந்த நேரத்தில் என்ன உணவு கொடுக்க வேண்டும் என்பது ஒரு தாய்க்குத்தான் தெரியும்.

ஆகவேதான், தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நன்றாக நினைத்து நினைத்து ஒவ்வொரு வகையான, புதுவகையான உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து குபேர வீட்டுக் குழந்தைகள் மட்டுமே சாப்பிட்டு வந்த உணவுப் பழக்கவழக்கத்தை குடிசை வீட்டுக் குழந்தைகளும் சாப்பிட வேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) புது வகையான உணவு வகைகளை அறிமுகப்படுத்தியிருக்கின்ற எங்களின் தாய்க்கு துறையின் சார்பிலே நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதற்குப் பிறகு, சத்துணவுத் திட்டத்தினுடைய உயர்மட்டக் குழு உறுப்பினராக எங்களுடைய அன்னையை நியமித்தார்கள். அப்போதே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். என்றைக்காவது ஒரு நாள் இந்தச் சத்துணவுத் திட்டத்திலே ஒரு புரட்சி வரும். (மேஜையைத் தட்டும் ஒலி) அந்தப் புரட்சியைச் செய்யப் போகிறவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பது புரட்சித் தலைவருக்குத் தெரிந்துதான் எத்தனையோ பேர்கள் இருந்தும்கூட எங்களின் அன்னையை உறுப்பினராக்கினார். எங்களுடைய அன்னையும் உடனடியாக தன்னுடைய சொந்தப் பணத்தில் தான் நடித்து உழைத்து சம்பாத்தியம் செய்த பணத்தில் ஒரு சத்துணவுக் கூடத்தை, சாப்பிடுகின்ற அரங்கத்தை தேவிப்பட்டிணத்திலே தன்னுடைய அன்னையாரின் பெயரிலே அன்னை சந்தியா உணவுக் கூடம் என்று திறந்து வைத்து அன்றைக்கே இந்தத் திட்டத்திற்குப் பெருமை சேர்த்துத் தந்தவர் எங்களுடைய அன்னை புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் எதைச் செய்தாலும்சரி ஒரு கணக்குப்போட்டுத்தான் செய்திருக்கிறார் என்பது இப்போதுதான் எங்களுக்குத் தெரிய வருகிறது. மதுரையில் நடைபெற்ற மாநாட்டிலே செங்கோலைத் தந்தார் எங்களின் அன்னைக்கு. புரட்சித் தலைவருக்குத் தெரியும். இந்த நாட்டை எதிர்காலத்திலே நிரந்தரமாக ஆளப்போவது அம்மாதான் என்று புரட்சித் தலைவருக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவுத்

2012 நவம்பர் 2] [திருமதி பா. வளர்மதி]

திட்டத்திலே உயர்மட்டக் குழு உறுப்பினராக்கினார். அப்போதும் தெரியும் புரட்சித் தலைவருக்கு. இந்தத் திட்டத்தை மாற்றியமைக்கப் போகிறவர் மாண்புமிகு அம்மா என்று. அதுமட்டுமல்ல நாடாளுமன்றத்தினுடைய மேலவை உறுப்பினராக அறிஞர் அண்ணா அவர்கள் உட்கார்ந்த அந்த சீட்டிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களை அமர வைத்த பெருமை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சாரும். புரட்சித் தலைவருக்கு அன்றைக்கே தெரியும் எதிர்காலத்தில் இந்தியத் திருநாட்டில் மைய மண்டபம் மட்டுமல்ல, (மேஜையைத் தட்டும் ஒலி) இந்த நாடாளுமன்றத்தையே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளப்போகிறார் என்பதை கணக்குப் போட்டுத்தான் ஒவ்வொரு செயலையும் செய்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் ஆரம்பித்த திட்டத்திற்கு இன்றைக்கு புது உணர்ச்சியை ஊட்டியிருக்கின்ற எங்களின் அன்னை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு, வணங்கி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல நல்ல திட்டங்களை வேளாண்மைத் துறையிலே அறிவித்து, விவசாயிகள் வாழ்க்கையில் ஒளி விளக்காக இருக்கின்ற தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், உதவுகின்ற வகையிலும் விதி 110-ன்கீழ் வேளாண் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற இளநீர், சீயக்காய், பருத்தி போன்ற மருத்துவத் தன்மையுடைய பொருட்களை பொதுமக்கள் அதிகமாக வாங்கி பயன்படுத்துகின்ற வகையிலே, விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற கருத்தரங்கம் மற்றும் விளம்பரம் செய்ய பத்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, இதன்மூலம் விவசாயிகளுடைய வருமானத்தை அதிகப்படுத்தவுள்ள இத்திட்டத்தை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய துறையின் சார்பாகவும், விவசாயிகள் சார்பாகவும், குறிப்பாக தென்னை விவசாயிகள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலேயே தமிழகம் மருத்துவத் துறையில் முதன்மை மாநிலமாகத் திகழ வேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் வரலாறு காணாத வகையில் ரூபாய் 5,386 கோடி நிதியொதுக்கீடு செய்துள்ளார்கள். இது கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைவிட 40 விழுக்காடு அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தமிழ்நாடு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே* Health Indicators *எனப்படும் சுகாதார குறியீடுகளில் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு மருத்துவமனைகளை மேம்படுத்த வேண்டுமென்ற முறையில் அடிப்படைச் சேவைப் பணிகளை மேம்படுத்தவும் ஆணையிட்டுள்ளார்கள்.*

*பிற்பகல் 12-05*

*மருத்துவமனைகள் தூய்மையானதாகவும், பாதுகாப்பானதாகவும், தரமானதாகவும் தனியார் மருத்துவமனைக்கு இணையாகவும் பராமரிக்கப்பட முதல்முறையாக வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கிராம செவிலியர்களின் பணிச் சுமையைக் குறைக்கின்ற வகையில் அவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கவும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதைவிட மேலாக புரட்சித் தலைவியின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஒன்றரை இலட்சத்திற்கு மேல் செலவாகும் நவீன அறுவை சிகிச்சைகளையும் சேர்த்துள்ளார்கள். கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை என்றால் கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் செலவாகிறது. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை என்றால் 15 இலட்சம் ரூபாய் செலவாகிறது. அதேபோல்* Cochlear implantation *என்று சொல்லப்படுகின்ற செவித் திறனற்ற சிறு குழந்தைகளுக்குச் செய்யப்படுகின்ற அறுவை சிகிச்சைக்கு 7 இலட்சம் ரூபாய் செலவாகிறது. அதைவிட முக்கியமாக* stem cells treatment-*க்கு கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய் செலவாகிறது. இவற்றையெல்லாம் ஏழையெளிய மக்கள் பயனடையும் வகையில் அதிகப்படியான தொகையை அரசே*

ஏற்கும் என்று அறிவித்த டாக்டர்களுக்கெல்லாம் டாக்டராக விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆழ்ந்த நம்பிக்கை இமயமலையைப் போன்றது. அதை எவராலும் அசைத்துவிட முடியாது என விவேகானந்தர் குறிப்பிட்டார். கஷ்டம் இல்லாமல் வெற்றி இல்லை, முட்கள் இல்லாமல் அரியணை இல்லை, முயற்சி இல்லாமல் பெருமை இல்லை என அரிஸ்டாட்டில் குறிப்பிட்டார். வாழ்க்கையின் முழு அர்த்தமே ஒவ்வொரு மனிதனும் தனக்குள் இருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதுதான். பிறர் உயர்வுக்கும் பயன்படுகிற மாதிரி அடைகிற தனி மனித முன்னேற்றமே உன்னத வெற்றியாகும் என சர்ச்சில் குறிப்பிட்டார்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கூறிய பெரியவர்கள் சொன்ன கருத்துகளை இயற்கையாகவே தன்னிடத்தில் முழுவதுமாகப் பெற்று, அரிஸ்டாட்டில், இங்கர்சால், பெர்னாட்ஷா, சாக்ரட்டீஸ், ஷேக்ஸ்பியர் ஆகியோர் வடிவில் மானுட வாழ்வு சிறக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பர். அந்தக் குறைவற்ற செல்வத்தை எதிர்காலச் சந்ததியினர் நிரம்பப் பெற வேண்டும் என்பதற்காக மனிதப் புனிதவதி நடவடிக்கை எடுத்து சுகாதாரத் துறையிலே பல்வேறு அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள்.

எதிர்கால தமிழகச் சிற்பிகள், குழந்தைகள், ஊட்டச் சத்துக் குறைவினால் வாட்டம் அடையக்கூடாது என்பதற்காக, பல்வேறு அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். பாரம்பரியமிக்க வேளாண்மைப் பொருட்களின் மகத்துவம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவிப்பு. அம்மா இன்றைக்கு உங்களால் இளநீரும், சீயக்காயும், பருத்தியும்கூட உயர்வை அடைந்திருக்கின்றன.

சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட வீரமங்கை வேலுநாச்சியாருக்கு நினைவுச் சின்னம் அமைக்க கோரிக்கை வைத்த உடனேயே நிறைவேற்ற ஆணையிட்ட நமது வீரத் திருமகள், வெற்றித் திருமகள், வேலுநாச்சியார் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

அன்னையே, நீர் இன்றி அமையாது இவ்வுலகு. அம்மா, நீங்கள் இன்றி உயராது தமிழ்நாடு. தமிழ்நாட்டை இத்தரணியில் தலைநிமிர்த்த, முன்நிறுத்த முப்பொழுதும் உழைக்கும் முன்னவர், முறை செய்து காக்கும் மூலவர், தன்னை மெய்வருத்தி உழைக்கும் தியாகத்தின் திருவுருவம், பன்மொழி வித்தகம், பல்கலைப் புத்தகம், மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு அளித்திருக்கின்ற முத்தான திட்டங்கள் அனைத்தையும் கண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறார்கள். அவர்களுடைய மகிழ்ச்சியோடு என்னுடைய மகிழ்ச்சியையும் இணைத்து மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### காவிரி நதி நீர் ஆணையத்தின் முடிவினையும், உச்ச நீதிமன்ற உத்தரவையும் நிராகரித்து கர்நாடக அரசு, தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் திறந்துவிட மறுப்பதால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று காவிரி நதிநீர் ஆணையத்தின் முடிவினையும், உச்ச நீதிமன்ற உத்தரவையும் நிராகரித்து கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட மறுப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன் ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 56-ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. ந. நஞ்சப்பன், திரு. பி.எல். சுந்தரம், திரு. கு. லிங்கமுத்து, திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. கே. உலகநாதன் ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையிலே சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.